தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **info@tsch.org.au**

அரையாண்டுப் பரீட்சை 2025

ஆண்டு: 10 திகதி: 21.06.2025

நேரம்: 2 1/2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி புவனேஸ்வரி புருஷோத்தமர்

மாணவர் பெயர்: ....

வினாக்கள்	வினா புள்ளி	பெற்ற புள்ளி
வினா 1	15	
வினா 2	20	
வினா 3	15	
வினா 4	15	
வினா 5	20	
வினா 6	15	
மொத்தப் புள்ளிகள்	**100**	

– BLANK PAGE –

வினா இல	1	புள்ளிகள்	15	பக்கம்	3

பின்வரும் பந்தியை வாசித்தபின் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த எழுச்சிமிக்க கவிஞர் பாரதிதாசன். இவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமூக முன்னேற்றத்துக்கும் பெரும் பங்களிப்புச் செய்தவர் ஆவார்.

1891 ஆம் ஆண்டு இந்தியாவிலுள்ள புதுச்சேரியில் பிறந்தார். இவரது இயற்பெயர் சுப்புரத்தினம். தந்தையார் பெயர் கனகசபை. பாரதியாரின் கவிதைகளால் கவரப்பெற்றுத் தனது பெயரைப் பாரதிதாசன் என்று வைத்துக்கொண்டார். புரட்சிக்கவிஞர், புதுவைக்குயில் என்ற சிறப்புப் பெயர்கள் இவருக்குண்டு.

பாரதிதாசன் தனது நூல்களில் சாதிஒழிப்பு, பெண்விடுதலை, கல்வியின் முக்கியத்துவம் ஆகியவற்றை வலியுறுத்தினார். சிறந்த கவிஞரான இவர், கல்லூரி ஆசிரியர், எழுத்தாளர், நாடக ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர், திரைப்பட வசனகர்த்தா என்று பன்முக ஆளுமை கொண்டு பணிசெய்தார்.

1. பந்தியில் குறிப்பிடப்பட்ட கவிஞரின் இயற்பெயர் என்ன? (1புள்ளி)

.....

2. அவர் தனக்குத் தானே வைத்துக்கொண்ட பெயர் என்ன? (1புள்ளி)

.....

3. எதனால் தனது பெயரை மாற்றிக்கொண்டார்? (3புள்ளி)

.....

.....

4. இவருக்குக் கொடுக்கப்பட்ட சிறப்புப் பெயர்கள் யாவை? (2 புள்ளி)

.....

.....

5. இக் கவிஞர் வேறு எந்தெந்தப் பணிகளில் ஈடுபட்டார்? (5 புள்ளி)

.....

.....

6. இவர் தனது நூல்களில் வலியுறுத்திய கருத்துகள் எவை? (3 புள்ளி)

.....

.....

வினா இல	2	புள்ளிகள்	20	பக்கம்	4

தரப்பட்ட உரைப்பகுதியை வாசித்தபின் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

தலைமுறை இடைவெளி என்றால் தலைமுறைகளுக்கு இடையிலான வெற்றிடம் என்பர். அதாவது ஒரு காலத்தில் வாழ்ந்தவர்களுக்கும் அவர்களுடைய அடுத்த பரம்பரையில் பிறந்தவர்களுக்கும் இடையே காணப்படுகின்ற எண்ணங்கள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கைமுறைகள், விருப்பத்தெரிவுகள் என்பவற்றில் உள்ள வேறுபாடுகளைக் குறிக்கின்றது எனலாம். இந்தத் தலைமுறை இடைவெளி பெரும்பான்மையாகக் குடும்பங்களிலும் சமூகத்திலும் வேலைவாய்ப்புகளிலும் காணக்கூடியதாக உள்ளது.

தலைமுறை இடைவெளி என்பது எல்லாக் காலத்திலும் இருந்த ஒன்றே. சமூகத்தில், குடும்பத்தில் மாற்றங்கள் முன்பு மெதுவாக நடைபெற்றமையால், அது பெரிதாகப் புலப்படவில்லை. ஆனால் இந்த நூற்றாண்டில் எமது சமூகத்தில் தலைமுறை இடைவெளி என்பது மிகப் பெரிதாகத் தோற்றமளிக்கிறது. இதற்குக் காரணங்கள் பலவாகும். தொழில் நுட்பத்தின் துரிதவளர்ச்சி, இணையப் பயன்பாடு, புலம்பெயர் வாழ்க்கை, பல்கலாசாரச் சூழல், அறிவியல் கல்வி வளர்ச்சி, உலகமயமாதல் என்பவற்றைக் கூறலாம்.

எமது பழைய தலைமுறையினர் அதிக அனுபவம் வாய்ந்தவர்கள்.வாழ்க்கையை நம்பிக்கையோடும் ஒழுக்கத்தோடும் சிக்கனத்தோடும் வாழ்ந்தவர்கள். அதனால் அவர்களிடம், பெற்றோர்களையும் பெரியோர்களையும் மதித்தல், அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடத்தல், குடும்பத்தில் அன்பாக நடத்தல், குடும்பத்தின் ஒற்றுமை பேணல் ஆகிய பண்புகள் சிறப்பாக இருந்தன. ஆனால் இன்றைய தலைமுறையினர் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியால் இணைய உதவியுடன் அதிக தகவல்களை விரைவாகப் பெறக்கூடிய சூழலில் வாழ்கிறார்கள். இளையோர் தம்மைச் சுதந்திரமாக நினைப்பதும், தமது தனிப்பட்ட விருப்பங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதும் சாதாரணமாகக் காணமுடிகிறது.

இத்தகைய வேறுபாடுகள் கருத்து மோதல்களுக்கு வழிவகுக்கிறது. மூத்தவர்கள் இளம் தலைமுறையினரின் பழக்கங்களை ஏற்கத் தயங்குகிறார்கள். இளையோரும் பெரியவர்கள் கூறும் ஆலோசனைகளைப் பழையதாகப் பார்க்கிறார்கள். பெற்றோர்கள் அதிக அனுபவம் வாய்ந்தவர்கள் என்று மதிப்புடன் பார்க்க மறுக்கிறார்கள். இது குடும்ப உறவுகளில் விரிசலை உண்டாக்குகிறது. மனவருத்தத்தை ஏற்படுத்துகிறது. அன்பான ஆரோக்கியமான வாழ்க்கைச் சூழலைக் குழப்புகிறது.

தலைமுறைகளுக்கு இடையேயான இந்த வெற்றிடத்தைக் குறைக்கப் பரஸ்பர புரிதலும் பொறுமையும் மிக அவசியம். இளையோர்கள் பெரியோர்களின் அனுபவங்களையும் அறிவுரைகளையும் மதிப்போடு அணுகித் தமக்கேற்ற விதத்தில் கையாளப் பழகவேண்டும். பெரியவர்கள் இளம்தலைமுறையினரின் எண்ணங்களைப் புரிந்து அவர்களுக்கு ஆவன செய்வது வரவேற்கத்தக்கது.

ஊகத்துக்கு இடமளிக்காது, திறந்த மனத்துடன் வெளிப்படையாகக் கதைத்தால் இடைவெளி குறையும். பெற்றோர்களும் பிள்ளைகளும் மதிப்போடு சினேக பூர்வமாகக் கலந்துரையாடி நடந்தால் குடும்பமும் சமூகமும் இனிதாக இயங்கும் என்று நம்பலாம்.

1. தலைமுறை இடைவெளி எவற்றைக் குறித்து நிற்கிறது? (3 புள்ளி)

.....

.....

.....

2. தலைமுறை இடைவெளி இன்றைய காலத்தில் பெரிதாகத் தெரிவதற்கான காரணங்கள் எவை? (3 புள்ளி)

3. இன்றைய தலைமுறையினரின் வாழ்வு எப்படி இருக்கிறது? (2 புள்ளி)

4. பழைய தலைமுறையினரிடம் காணப்பட்ட சிறப்புகள் எவையெனக் கண்டீர்? (2 புள்ளி)

5. பெரியோர்கள் - இளையோர்கள் இடையேயுள்ள முரண்பாடுகள் எவையென இங்கே கண்டீர்? (2 புள்ளி)

6. தலைமுறைகளுக்கு இடையேயுள்ள வெற்றிடத்தால் உண்டாகும் பாதிப்புகள் எவை? (2 புள்ளி)

7. இந்த இடைவெளியைக் குறைப்பதற்கான வழிகள் எவை? (2 புள்ளி)

8. நீர் பெற்றோருடன் மாறுபட்ட ஒரு கருத்தைக் குறிப்பிட்டு, எப்படிச் சமாதானம் ஆனீர்கள் என்பதை விளக்குக. (4 புள்ளி)

– BLANK PAGE –

வினா இல	3	புள்ளிகள்	15	பக்கம்	8

கீழே தரப்படும் குறிப்புகளைப் பயன்படுத்தி இரண்டு பந்திகள் எழுதுங்கள். 100 -125 சொற்களில் அமையுமாறு பூரணமான வாக்கியங்களில் எழுதுங்கள். பந்திக்குத் தலையங்கம் இடுங்கள்.

1. இயற்பெயர்: வேங்கடரத்தினம்
   ஆசிரியர் வைத்தபெயர்: சாமிநாதன்
2. பிறப்பு: 19.02.1855
   மறைவு: 28.04.1942
   பிறந்த இடம்: உத்தமதானபுரம், தமிழ்நாடு, இந்தியா
3. பெற்றோர்: தந்தை வேங்கடசுப்பையர்
   தாய் சரஸ்வதிஅம்மாள்
4. உ.வே.சாமிநாதஐயர் என்பதன் விரிவு: உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் சாமிநாதஐயர்
5. இவருக்கான சிறப்புப்பெயர்கள்: தமிழ்த்தாத்தா, பதிப்புத்துறை வேந்தர், மகா மகோபாத்தியாயர்
6. கல்விப்பணி: தமிழ் ஆசிரியர், கல்லூரி முதல்வர்
7. தமிழ்த்தொண்டு: ஓலைச் சுவடிகளாக இருந்த தமிழ் இலக்கியங்களைத் தேடி எடுத்து அச்சில் பதிப்பித்தமை
8. பதிப்பித்து வெளியிட்ட பழந்தமிழ் நூல்கள்: சீவகசிந்தாமணி, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, புராணங்கள்
9. அவர் எழுதி வெளியிட்ட நூல்கள்: என் சரித்திரம், புதியதும் பழையதும், சங்கத்தமிழும் பிங்காலத்தமிழும் இன்னும் பல
10. அரசு அவருக்குச் செய்த சிறப்புகள்:
    டாக்டர் பட்டம் வழங்கியமை -1932 இல்
    உ.வே.சா நூலகம் அமைத்தமை –1942 இல் சென்னை
    அஞ்சல்தலை வெளியிட்டமை – 2006 இல்
    சென்னை மாநிலக் கல்லூரியில் அவரது உருவச்சிலை அமைத்தமை
    உத்தமதானபுரத்தில் நினைவு இல்லம் அமைத்தமை

வினா இல	4	புள்ளிகள்	15	பக்கம்	10

கடிதம் எழுதுதல்.

150 சொற்களில் எழுதுங்கள்.

உமது தமிழ்ப் பாடசாலையின் வருடாந்தக் கலைவிழாவில் நீர் பங்குகொண்டமை உமக்கு, தமிழ்ப் பேச்சு, நடிப்பு, தமிழ் கற்கும் ஆர்வம் ஆகியவற்றில் முன்னேற்றத்தைத் தந்துள்ளது என்பதைத் தெரிவித்து உமது நண்பன் / நண்பிக்குக் கடிதம் எழுதுங்கள்.

வினா இல	5	புள்ளிகள்	20	பக்கம்	12

கட்டுரை எழுதுதல் (20 புள்ளி)

பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிந்து 200 சொற்களில் கட்டுரை எழுதுங்கள்.

1. ‘‘உயர்தரப் பரீட்சைக்குத் தமிழை ஒரு பாடமாக எடுப்பது பயன் தரும்’’என்ற தலைப்பில் ஆண்டு 7-10 மாணவர்கள் மத்தியில் உமது தமிழ்ப் பாடசாலையில் நீர் ஆற்ற இருக்கும் பேச்சை உரையாக எழுதுக.
2. தாய்மொழிக் கல்வியின் அவசியம் பற்றி உள்ளூர்ப் பத்திரிகையில் வெளியிடக் கட்டுரை ஒன்று எழுதுக.
3. அவுஸ்திரேலியாவில் தமிழ் வளர்த்தோர் வரிசையில் ஒருவரைக் குறிப்பிட்டு அவரது தமிழ்ப்பணிபற்றி விபரித்துக் கட்டுரை எழுதுக.

வினா இல	6	புள்ளிகள்	15	பக்கம்	15

கேட்டுக்கிரகித்தல் (15புள்ளி)

பனுவல் 1

	இங்கே குறிப்பு எடுங்கள்
சித்தமருத்துவம் என்று குறிப்பிடப்பட்ட மருத்துவமுறை யாருடையது? (1புள்ளி)	
சித்தமருத்துவத்தின் சிறப்புகளாக நீர் கேட்டவற்றை எழுதுக. (4புள்ளி)	
எமது உடலில் நோய் எதனால் உண்டாகிறது என்று சித்தமருத்துவம் கூறுகிறது? (2புள்ளி)	

பனுவல் 2

	இங்கே குறிப்பு எடுங்கள்
1. இங்கே குறிப்பிடப்பட்ட கொண்டாட்டம் என்ன? (1புள்ளி)	
2. பிரதம விருந்தினர் தனது உரையில் மாணவருக்குக் கூறிய அறிவுரைகள் எவை? (4 புள்ளி)	
3. கலாசாரத்தைப் பிரதிபலித்த நிகழ்வுகளாக நீர் எவற்றை அவதானித்தீர்? (3புள்ளி)	